செ.வெ.எண்: 37 நாள்: 24.02.2020

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

**கோத்தகிரி ஒன்றியத்திலும் மற்றும் குன்னூர் பெட்போர்டு, இண்ட்கோசேர்வ் தொழிற்கூட்டுறவு அலுவலகத்திலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தொழில் தொடங்க விழிப்புணர்வு முகாம்**

நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலும் தொழில் முனைவோர்களுக்கு கடன் வசதி பெறும் வகையிலும் மாவட்ட தொழில் மையம், உதகமண்டலம் UYEGP / PMEGP / NEEDS ஆகிய மூன்று மாபெறும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின்கீழ் வாசனை எண்ணெய் தயாரித்தல், உல்லன் ஆடை, அடுமனை பொருட்கள், சணல் பைகள், பருத்தி பைகள் சாக்லேட், சணல் பைகள், அழகு நிலையம், பாக்குமட்டை தட்டுகள் தயாரித்தல், மளிகை கடை, ஃபோட்டோ ஸ்டுடியோ, சீட்கவர், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, ஜெராக்ஸ் சென்டர், லேத் ஒர்க்ஸ், சமையல் பாத்திரங்கள் வாடகை, இரு மற்றும் 4 சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், உணவு பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட தொழில்கள் தொழில்கள் துவங்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

இத்திட்டங்களின் மூலம் கடன் பெற்று தொழில் துவங்க விருப்பமுள்ளவர்கள்/ திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ள விருப்பப்படுவர்கள் வரும் **26.02.2020 புதன்கிழமை அன்று முற்பகல் 09.30 மணியளவில் கோத்தகிரி – ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில்** நடக்க உள்ள சுய வேலைவாய்ப்பு விழிப்புணர்வு முகாமிலும் மற்றும் **28.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் குன்னூர் பெட்போர்டு, இண்ட்கோசேர்வ் தொழிற்கூட்டுறவு அலுவலகத்திலும்** கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசெண்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
நீலகிரி மாவட்டம்

2/2